அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

இதழ் 2 மலர் 1	விக்ருதி ஆ சித்திரை 1950 ஆ ஏப்ரல்—மே	விலை அணா 2½

அசுரகுரு சுக்கிராச்சாரியார் சூரபதுமனுக்குத்
தீய உபதேசம் செய்தல்
(கந்தபுராணச் சித்திர விளக்கம்—11)

பொருளடக்கம்

			பக்கம்
1.	விண்ணுலகம்	(திருப்புகழ் மணி)	... 1
2.	வணக்கம்	(ரா. பி. சேதுப்பிள்ளை)	... 3
3.	அருளும் பொருளும்	(இளவழகனார்)	... 6
4.	ஆண்டு நிறைவு	(சீதாராம்)	... 13
5.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வெங்கடராமன்)	... 18
6.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 21
7.	இன்பமும் துன்பமும்	(அ. மு. பரமசிவானந்தம்)	... 27
8.	பக்தியும் இசையும்	(மேழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை)	... 33
9.	சென்னை அடியார் ஞாயிறு திருக்கூட்டம்		... 39

**விக்ருதி ஆண்டில் உலகெங்கும்
அருள், அன்பு, அமைதி ஓங்கி,
சுகம், சாந்தம், சந்தோஷம் நிலைக்க
இறைவனை அமிர்தவசனி வந்தித்து
வேண்டுகிறது.**

ஒவ்வொரு ஆங்கில மாதம் 12ம் தேதி அமிர்தவசனி அனுப்பப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடுவது நலம்.

"அமிர்தவசனி" இரண்டாவது வருட

சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். ஆயுள் சந்தா ரூ. 25-0-0.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை—1,

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி௵ சித்திரைமீ ஏப்ரல்—மே—1950	இதழ் 1

விண்ணுலகம்

(திருப்புகழ்மணி)

அத்தனை, முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை, அம்மை சிவகாமி சுந்தரி நேசனை, யெங்
கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே.

மண்ணுலக மென்றும் விண்ணுலக மென்றும் சொல்கின்றார்களே, அந்த விண்ணுலகம் எங்கே யிருக்கின்றது. போக வழி யேது? ஏறிச்செல்ல ஊர்திகள் உண்டோ? மண்ணுலகத்தைப் போல சூரிய சந்திரர்கள், மலை, கடல், வானம் இவையெலாம் உண்டோ, வேந்தர் யார், அந்த ஊர் எல்லை எங்கே காணப்படும். இவ்விதமான அநேக கேள்விகள் பிறக்கின்றன.

விண்ணுலகம் உள்ளே காணப்படும் உலகம். உண்மையான உலகம், அழியாத உலகம், உணர்ச்சி யுலகம்,

---

வேல்கொடு விடுதது சூர்தலை துணித்த பெருமானே
மாசினை யறுத்து ஞானமுதளித்த வரமிளி நீத்த மறவேனே.

இரவு பகல் அற்ற உலகம். சூரியர் சந்திரர் ஆதிபத்யத்தைத் தாண்டி நிற்கும் உலகம். வழியுண்டு. ஊர்திகளு முண்டு. மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் ஒரு கதவு உண்டு. மானிடன் கண் இமைகள் தான் அவை. விண்ணுலகத்து எல்லைக்குள்ளே தான் மண்ணுலகம் வியாபித்து நிற்கின்றது. மண்ணுலகம் சிறை போலும். விண்ணுலகம் வெட்ட வெளி போலும். முகத்தின் கண் வழியே மண்ணுலகம் காணலாம். அகத்தின் கண் வழியே விண்ணுலகம் இலங்கும். கண்மூடி மௌனியாய் சும்மா இருக்க எண்ணினார் **தாயுமானார்.** விண்ணுலகம் வெளி யாச்சு. ஒன்றென ஒளிரும் உலகம். "இவ்வுலகம் சென்று காட்சி கண்டு வரலாம்! வாருமே!" என்று அழைக்கின்றார் அருணகிரியார். "ஊர்தி உண்டோ" என்றேன். "உண்டு, மயில்தான்" என்றார். "ஓட்டும் சேவைக்காரன் யார்?" என்றேன். "முருகன்" என்றார். "நமச்சிவாய" என்ற மலையொன்றுண்டாம். அதின் மீது எறிச் சென்றால், களைப்பே அற்றிருக்குமாம். மேலும் எறிச் செல்லச் செல்ல நாவில் இன்ப ரஸம் பாய்ந்து சுவைத்து இளைப்பற, களைப்பற சக்தியெலாம் வளர்ந்தே நிற்குமாம். "நாவின்ப ரஸமதாகி" "ஆனந்த அருவி பாய" அருமையான செவிச்சுவை யீன்றிடும் சங்கீத "நாதங்களோடு குலாவி" விளையாடியே செல்லலாமாம். போகப் போக "நான்" எனும் ஊனம் அதாவது மாயை உணர்வினின்றும் நழுவி விழுந்து விடுமாம். வெறும் "தானாய்" நிலை நிற்கும் தத்துவ உணர்ச்சி கூடுமாம். பரத்தோடு பரமாய் எல்லாம் ஒன்றெனும்

ஆசி லாத மறைக்குந்தே டொணாதொரு வர்க்கொன்
றுடல் தாள்க ளெனக்கின் றருள்வாயே.

உணர்ச்சியில் கூடி ஓங்கார மயில் மேல் முருகன் வேறு தான் வேறு என்ற உணர்ச்சியற்று, விளங்கும் பேரானந்தத்தை ஊட்டுவது அந்த விண்ணுலகம். பதினான்கு லோகமெலாம் வலமதாய் ஒரு நொடியில் சுற்றி விளையாடலாமாம். வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி பரப்பற்று பரமானந்தத்தே தேங்கி ஓங்கார உள்ளொளிக்குள் ஒருவனாய் விளங்கலாமாம். "ஞானங்கொள் பொறிகள் கூடி" என்ற திருப்புகழ்ப் பாட்டினால் விண்ணுலகம் சுற்றிப் பார்க்க வாருமே என்று உலகோரை அழைக்கின்றார். வெளிக் கண்ணை மூடி அகக் கண்ணைத் திறந்து நோக்கத் தெளிவிரேல் வழியும் தென்படும். முருக நாமம் எனும் ஊர்தியும் பயன்படும். உலக மொருவி அனுபவன சிவ யோக சாதனையில் ஒழுகுபவர் நாடே விண்ணுலகம். வேந்தன் முருகன். குடிகள் முருகன். எல்லாம் முருகன். தெய்வ தரிசனம் கைகூடும்.

ஸர்வம் குகமயம் ஜகத்.

வணக்கம்

(ரா. பி. சேதுப் பிள்ளை)

இந்நாளில் வருகின்ற விகிர்திக்கு ஒரு வணக்கம்; போகின்ற விரோதிக்கும் ஒரு வணக்கம். வணக்கம் என்ற சொல்லின் அழகுதான் என்னே! வாய்க்கினிய அச் சொல்லிலே அன்பு மணக்கின்றது; ஆர்வம் தழைக்கின்றது.

பசுபாசமு மகிலாதிக பரிபூரண புராணாகா
பதிநேருந் னருளால்மெயு ணர்ந்திடேனே.

தலையால் வணங்குதல் சாலச் சிறந்தது என்று தமிழ் நாட்டார் கருதுவர். இறைவனது திருவடியை வணங்கும் தலையே தலை என்று அறிவுறுத்தினர் திருவள்ளுவர். ஆலயத்திற்குள்ளே செல்லும் போதும், அடியார் திருக் கூட்டத்தைக் காணும் போதும், ஆன்றோர் வாய் மொழியைக் கேட்கும் போதும் தலை வணங்குவோர் தக்கோர்.

அறத்தின் நிலையமாகிய வீட்டையும் தலையாலே வணங்கிய நாடு தமிழ் நாடு. வீட்டின் உள்ளே தலை வணங்கிச் செல்வது தமிழ் நாட்டு வழக்கம். ஒவ்வொரு வீட்டின் தலைவாயிலும் இதனை அறிவுறுத்தும் பான்மையில் முற்காலத்தில் அமைந்திருந்தது. தணிந்த தலைவாயில் வணங்கி வருவோரை வரவேற்கும்; நிமிர்ந்து வருவோரை நெற்றியில் அடித்து நிறுத்தி விடும்.

வணங்கிய தலையை எல்லோரும் விரும்புவர்; வணங்காத் தலையை வெறுப்பர். துர்க்குணக் கொழுந்தாகிய துரியோதனன் வணங்கா முடி மன்னன் என்று பெயர் பெற்றிருந்தான். அவன் கெட்டொழிந்த வரலாறு வணங்காத் தலையர்க்கு ஓர் எடுத்துக் காட்டாகும். விளைந்த கதிர் வணங்கும் என்பது இந்நாட்டுப் பழமொழி.

வணங்கிய வாயும் பண்பாட்டிற்கு ஓர் அடையாளம். 'நுணங்கிய கேள்வியர் அல்லார், வணங்கிய வாயினர் ஆதல் அரிது' என்றார் திருவள்ளுவர்.

வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும் வடிவேலா
எனதுள மகிழ்வுற அருள்வாயே.

எனவே கற்றல் கேட்டல் உடையார் வணங்கிய வாயினர் ஆவர் என்பது வள்ளுவர் கருத்து. இதற்கு ஒரு சான்று தருகின்றார் கம்பர்.

'கவிக்கு நாயகன்' என்று கம்பர் பாராட்டும் பெருமை வாய்ந்த அநுமன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; சொல்லின் செல்வன்; நெறி யுணர்ந்து பேசும் நீர்மை வாய்ந்தவன். ஒருகால் இராமர் தலைமை வீற்றிருந்த சபையில் அவன் பேச எழுந்தான்.

"வணங்கிய சென்னியன், மறைத்த வாயினன் நுணங்கிய கேள்வியன் நுவல்வ தாயினன்" என்று அநுமன் நின்று பேசத் தொடங்கிய நீர்மையைக் கம்பர் எழுதிப் போந்தார்.

வணங்கிய வாயினின்று வரும் சொல்லே வெல்லும் சொல்லாகும். இத்தகைய பண்பும் பயனும் விகிர்தி வருஷத்தின் சுகிர்தமாகப் பெற்று வாழ்வோமாக.

வணக்கம்.

தங்கள் வருட சந்தாவை உடனே அனுப்பிவையுங்கள். பக்தியில் ஈடுபட்ட தங்களுடைய நண்பர்களையும் சந்தாதாரர் களாகச் செய்யுங்கள்.

சரியைக்கி யாயோக நியமத்தின் மாயாது
சலனப்ப டாஞானம் வந்து தாராய்.

அருளும் பொருளும்

(இளவழகனார்)

4

நல்ல பகல் நேரத்தில் காரைக்கால் அம்மையின் கணவன் தன் வாணிப நிலையத்திலிருந்து இல்லத்துக்கு வந்தான்; இனிதே நீராடினான்; உணவுக்கு அமர்ந்தான். அம்மையார் தம் கடமைப்படி உணவு படைத்தார். கறியமுதுகள் சமைக்கப் பெற்றிருந்தன. முறையாக அவற்றை இட்டு உண்பித்தார். அவன் முன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்று மிச்சம் இருந்தமையால், அதனையும் கலத்தில் வைத்தார். பரமதத்தன் ஆர அமர உண்டு மகிழ்ந்தான்.

மாங்கனி இனிய சுவையுடையதாய் இருந்தது. மற்றொன்றையும் உண்ண வேண்டுமென்று அவனுக்கு ஆவல் உண்டாயிற்று. அம்மையாரை நோக்கி, 'இனியதொரு பழம் இன்னும் உளது; அதனை இடுக' என்றான். அம்மையார் அதனைக்கொண்டு வருகின்றவர் போல உள்ளே சென்றார். ஆனால் கனிக்கு அங்கு என் செய்வார்.

பரமதத்தன் காலையில் நீராடுதலைக் காணோம்; நீராடிய பின் வழிபாடு செய்தலையுங் காணோம். குளித்த பின் உண்ணல் என்பதை அறிந்திருந்தான். உணர்வு ஒளியில் அம்மையார் நிலை எங்கே, அவன் நிலை எங்கே?

அபரிமித சிவஅறிவு சிக்குற் றுணர்ச்சியினில்
ரக்ஷித்த வித்தருள்வ தெந்தநாளோ.

மலைக்கும் அணுவுக்கும் உள்ளது போல் வேறுபாடு பெரிதாயிருந்தது. அம்மையார் உள்ளத்தை அவன் நிலைமைகள் எப்படிக் கவரும்?

திருமணங் கூடி வாழ்க்கை நிலையில் இருந்தமையால் அம்மையார் கற்புநெறி வழுவாமல் கடமைப்படி காரியங்களைச் செய்து வந்தார். அடுத்தது காட்டும் பளிங்குபோல் அவரவர் உள்ளத்தின் நிலைகளை நன்கு புலப்படுத்திச் செய்யுள் இயற்றவல்ல சேக்கிழாரடிகள், அம்மையார் தம் கணவற்கு உணவு படைத்த வகையினைக்

"கற்புடைய மடவாரும் கடப்பாட்டில் ஊட்டுவார்"

என்று காட்டினார். மகிழ்வுடன் ஊட்டத் தகுந்த நிலைமையில் அவன் இல்லையே, என்ன செய்யலாம்? முன்னே நல்விருந்தாய் வந்த அடியார்க்கு அமுதூட்டிய போது, பேறு இதன்மேல் வேறில்லை என்று அம்மையார் கருதினார்.

நல்ல நறு மாங்கனிகள் இரண்டினில் ஒன்றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்

அடியார்தமை அமுது செய்வித்தார். அம்மையார் உள்ளம் தகவர் திறத்தில் அவ்வளவு ஈர்ப்புள்ளதாய் இருக்கின்றது. பள்ளந்தாழ் உறுபுனல்போல் கீழ்மேலாகிப் பதைத்துருகுகின்றது. அவ்வளவு விரைவும் துடிப்பும் பரமதத்தனுக்கு உணவு படைக்குங்கால் உண்டாகவில்லை. அன்ன நடைதான் அங்கே காணப்படுகின்றது. மாங்கனியாக இருந்ததனை

பகர்தலி லாதானை யேதுஞ் சிலதறி யாவேழை நாளுன்
பதிபசு பாசோப தேசம் பெறவேணும்.

" அன்னமனை யார்தாமும் கொடுவந்து கலத்தளித்தார் "

என்று இக் குறிப்புத் தோன்ற ஆசிரியர் அந்நிலைமையைக் கூறிச் சென்றார். இயல்பாகவே உள்ளம் ஈர்ப்புறாத போது கடமைக்காகத் தானே பணி செய்யும்படி நேரும்.

அம்மையார் காதலெல்லாம் இறைவன் திருவடி மாட்டு ஒழிவின்றிப் பெருகி வருகின்றதேயன்றி இல்லத்தில் இல்லை. அந் நிலையில், குறை பிறர்க்குப் புலப்படாத படி கற்பு வழுவாமல வாழ்க்கை நடத்தி வந்தார் என்பதை ஆசிரியர் முன்னும் ஒருமுறை,

" ஆங்கவன்றன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலா ரவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மையில் பயில்வார் "

என்று தெளிய விளக்கினார்

பரவையார்க்கு நம்பியாரூரர் அமைந்ததுபோல் அமைந்தால் வாழ்க்கையே ஒரு திருவருட் பணியாய் இருக்கும். நம்பியாரூரர் நிலை எவ்வளவு, பரமதத்தன் நிலை எவ்வளவு? பரவையாரை நம்பியாரூரர் 'திருவருள்' என்றே கருதினார் ; தொடக்கத்திலேயே கருதினார் ; திருவருட் பான்மையிற் காதலுற்றார். பரமதத்தன் புனிதவதியாரை அவ்வளவு பெரிய நிலையில் அறிந்துகொள்ள முடியவில்லை. பின்பு அவர்பால் அருஞ்செயல் கண்டவிடத்தும் பெரிய உணர்வில் அவரை அணுகி அன்புறாமல், சிறிய நினைவில் ' ஏதோ ஒரு தேவதை இது ' என்று அஞ்சி விலகுதலே

ஓங்குமயில் வந்து சேண்பெற இசைந்து
ஊன்றிய பதங்கள் தருவாயே.

கருத்தானான். ஆரூரர் பரவையார் மகிழ்விற் பெரிதுங் கருத்துடையவர் ;

" வாளன கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே."

என்று இறைவனை நோக்கி வேண்டியும் அவர் பரவையார்க்கு மகிழ்வு தந்து வந்தார். பரமதத்தனோ, தான் கொடுத்தனுப்பிய மாங்கனியில் ஒரு பகுதி கூடத் தன் அரிய வாழ்க்கைத் துணைவியாரான புனிதவதியார்க்கு உதவும் அன்பின்றி, 'இனியதொரு பழம் இன்னும் உளது, அதனை இடுக' என்கின்றான். பொது மக்களுக்கு இருக்கும் எளிய அன்புகூட மனைவியார்பால் பரமதத்தனுக்கு அவ்வகையில் இல்லையே !

உணர்வு நுட்பமின்றிப் பரமதத்தன் இவ்வளவு எளியனாயிருத்தலின், அம்மையாரின் அகவுணர்வு மாட்சியை அவன் மதித்துணர மாட்டாதவனானான். தெய்வ வழிபாடு, அடியார் திருத்தொண்டு முதலியவற்றில் அவன் உள்ளம் அத்தனை மகிழ்வு கொள்ள இடம் பெறாதாயிற்று. மகிழ்வு கொள்வதாயிருந்தால், அம்மையார் நெறிகளில் அவனுங் கலந்து வாழ்பவனா யிருப்பான். இல்லத்துக்கு வந்தவுடன் அடியார்களுக்கு முதலில் உண்பிக்கும் ஆர்வமுள்ளவனாவான். 'எவரேனும் பெரியோர் வந்தனரா, இன்று நாம் அப்பேறு பெற்றோமா' என்று உசாவியிருப்பான். ஒருவர் வந்து மாங்கனி உண்டு சென்ற செய்தி கேட்டு உள்ளம் களித்திருப்பான்.

மாசை வெந்திடவுனை மிஞ்சிசிவ
சேவை கண்டுளது பாத தொண்டனென அன்புதாராய்.

அம்மையாரும், நடந்த செய்தியைத் தாமே ஆர்வமாய் முன்வந்து சொல்லி மகிழ்ந்திருப்பார். நிலை வேறாய் இருந்தமையின், பரமதத்தனுக்கு இவற்றில் ஏதும் ஆர்வ மில்லை. அம்மையாரும் முன்வந்து சொல்லி மகிழ வழியில்லை. 'மாங்கனி மற்றொன்றுங் கொண்டு வருக' என்று கணவன் கேட்டபோதாயினும், நடந்ததை உடனே தெரிவிக்க அம்மையார்க்கு மனம் செல்லவில்லை. நல்லார் ஒருவர்க்கு இட்டதை அவன் உள்ளம எவ்வாறு கருதுமோ என்று அம்மையார் துணுக்குறும்படி, பரமதத்தன் அறிவுநிலை அவ்வளவு பரியதாய் இருநதது. கொண்டு வருவார் போல உள்ளே சென்றார்.

கருத்துடைய கணவன் அமையாதபோது உயர்ந்த ஒழுகலாறுகளைக் காத்து நிற்றலில், கற்பு மிக்க மாதர் எவ்வளவு இடுக்கணுறுகின்றனர் என்பதை அம்மையார் நிலைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். மணநிகழ்ச்சி அவரவர் உணர்வு நிலைகளுக் கேற்பத் திருவருட் பாங்கின் வழியே நிகழ்தல் மிகவும் முதன்மையான தென்பது இதனால் தெளியப்படும்.

5

உள்ளே சென்ற அம்மையார், கனிக்கு என் செய்வது என்று உள்ளங் கலங்கினார். திருவருட் காதல் பெரிதுடையாராதலின், அவர் உள்ளம் இயல்பாகவே திருவருளை நினைந்தது; மெய்ம் மறந்து நினைந்தது. அதாவது, புலன் ஒடுங்கி நினைந்தது. புலனொடுங்கவே மனவெளி திறநதது. நண்ணிய அவ்வெளியில் திருவரு

சித்தந்துயர் கெட்டுப் பதிபிற அருள்வோனே
முத்திப் புணரிக்குட் புகவா மருள்வாயே.

ளியக்கம் நன்கு நடமாடல் இயன்றது. அது, அவ் வெளி வழியே ஒரு மாங்கனி வடிவில் இயங்கிப் பின் பருமையுற்று அம்மையார் கைமமலரில் வந்து தங்கியது. அருள் பொருளானது; அதாவது, பொருளென வடி வெடுத்து நின்றது; உற்றவிடத்து உருக்கொண்டு உதவு வது திருவருள்; அம்மையாரின் தூய்மை, இவ்வாறு புலனொடுக்கமும், நினைவு ஒருமையும், உணர்வு நுட்பமுந் தந்து அருள் இயக்கத்திற்கு ஏற்றதாயிற்று. மகிழ்வு மீதூர, அதனை அவர் தம் கணவனுக்குப் படைத்தார்.

முன்பு, அடியார்க்கு அன்புடன் இட்ட மாங்கனி பொருள் மாங்கனி; இப்போது அம்மையார் கை வந்து தங்கியது அருள் மாங்கனி! ஆகவே, சுவை மிகுந்து தோன்றியது. அதனைச் சுவைத்துண்ணும் பெருந்தவ மேனும் படைத்த பரமதத்தன் உள்ளம் பெருவியப்பாற் பூரித்தது. செல்வ மகனுகலின், அவன் எத்தனையோ வகையான மாங்கனிகளை அதுகாறும் சுவைத்திருக்கின் றான். ஆயினும், இதைப்போல ஒரு பழம் அவன் என்றும் உண்டதில்லை. இது,

முன்தருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான்.

அருள், பொருள் வடிவில் அவன் உட்சென்று, அவனுக்கு இந்த உணர்வைத் தந்தது. பொருள் நிலையில் உள் ளோர்க்கு உணர்த்தும் வாயில் அதுதானே! மூவுலகிற்கும் அப்பாற்பட்டது அருளைத் தவிர வேறொன்றில்லை. மூவுலகுந்

மனமழியு மடிமையை நினைந்துச் சொர்க்கபதி
வழியை யிதுவழியென வுரைத்துப் பொற்கழல்கள் தருவாயே.

கடந்த ஒன்று உண்டு என்னும் உணர்வேனும் அவனுக்கு வந்தது; ஆனால், அது, அருள் என்பது தெளியான்.

இடுக்கண் தீர்ந்ததென்று கருதிய அம்மையார், அவன் கேள்விக்கு என்ன விடை பகர்வதென்று தோன்றாமல் மீண்டும் சோதனைக்கு ஆளானார். 'அருள் நிகழ்ச்சி, எளிதில் பிறர்க்கு விளம்பத் தக்கதன்று; மேலும் அது, சொல்லால் விளக்க இயலாதது; ஆனால், கணவன் கேட்டால் அதனை மதியாதிருத்தலும் கற்புடை மாதர்க்கு மெய் வழி ஆகாது. ஆகவே, விடை சொல்லுதலும் வேண்டும்.' அம்மையார் உள்ளம் கலக்கத்தால் இவ்வாறு ஊசலாடியது. கடைசியில், செய்தபடி சொல்லுவதே கடன் என்னும் சீலத்தோடு, திருவருளை உள்ளத்தெண்ணி, நிகழ்ந்தன யாவுங் கூறினார்.

'ஈசன் அருள்' எனக் கேட்ட இவ்விறைவன் அது தெளியான். பரிய அறிவினனை பரமதத்தனுக்கு அது புரிவது கூடாமைதான். ஆகவே, அவன் ஐயுற்று, 'அப்படியானால் இன்னமும் ஓர் ஆசில் கனி அவனருளால் அழைத்தளிப்பாய்' என்று கேட்டான். அம்மையார்க்குச் சோதனைமேல் சோதனையாயிற்று. மீண்டும் அவர் உள்ளே சென்று, 'ஈங்கு இது அளித்தருளீரேல் என் உரை பொய்யாம்' என உருக்கமாய்த் திருவருள் பரவி ஒருமை கூர, முன்போல் மற்றொரு மாங்கனி அருளால் வந்தெய்தியது. கணவன்பாற் கொண்டுவந்து அவர் தருதலும், அது மறைந்தது. பொருளுருவாய்த் தோன்றிய அருள், தன் இயல்பை அடைந்தது. அருள் பொருளாகிய திருவிளையாடல் முடிந்தது.

நரிநாய்பேய் பாறொடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்பதான
பாழுட லெடுத்து விணில உழல்வேனே.

பரமதத்தன் துணுக்குற்றான். அம்மையாரை நோக்கினான் 'இது, ஏதோ ஒரு தேவதை இங்கே வந்து தங்கியிருக்கின்றதே' என்று அஞ்சினான். ஒன்றும் பேச இயலவில்லை. அம்மையாரை விட்டு விலகிவிடலாம் என்று அவன் உள்ளம் கருதியது. வெளியே சொல்லவும் நா நடுங்கியது. பெரிதும் மருண்டவனாய், அது முதல் நாளும் வெளியிற் செல்வதும இல்லம் திரும்புவதுமாய் ஒரு பதுமைபோல் நடந்து கொண்டான். நாளுக்கு நாள் அம்மையாரை விட்டு விலகிவிடும் உட்கருத்து அவனுக்கு மிகுவதாயிற்று. மறை பிறர் அறியாமல், வழக்கம்போல் வாழ்க்கை நடந்து வந்தது.

ஆண்டு நிறைவு

(சீதாராம்)

தலைப்பில் ஆசிரியர் கூறியது போல் சென்ற முப்பது ஆண்டுகளாக வருட மொருமுறை வெளிவந்த நமது "அமிர்தவசனி" மாத மொரு முறையாகத் துவங்கிப் பன்னிரண்டு இதழ்கள் இதுவரை வெளிவந்து விட்டன.

அறுபதாயிரம் வருடம் இராசாங்கம் நடத்தியதாகக் கூறப்படும் தசரதமன்னனின் சதவில் ஓர் தினம் விசுவா மித்திர மா முனிவர் வர, அவரது வரவைப் பற்றிப் பெருமை மிகக் கூறித் தமக்கு எத்தகைய திருப்தியை

சேறுதனி லித்த மூழ்கி நாளவ மிறைத்து மாயை
சேர்தரு முளத்தனாகி யுழல்வேனோ.

அளித்தது என்பதற்கு உவமை கூறும் வகையில், அம் மன்னன்,

"யதா அமிருதஸ்ய ஸம்ப்ராப்தி"

தேவர்கள் உய்ய ஸ்ரீமந நாராயணனால் வரவழைக்கப் பெற்ற அமிருத பானத்திற்கு ஒப்பானது என்று சொல்லுகிறார்.

அவ்வாறே, கண்டதே காக்ஷி என்னும் சாரவக தத்துவத்துடன் கூடிய லோகாயதர்கள் மிகைப்பட்டு வரும் இக்காலத்தில் இந்த தெய்வீக மாதப்பத்திரிகை புத்துயிருடன் துவங்கியிருப்பது அடியார்கட்கு அமுத பானத்தை அளிப்பதைக் குறிக்கவோ என்னவோ அமிர்தவசனி என்னும் பெயருடன் தோன்றி வரலாயிற்று.

வியாஸர் வேதங்கட்கு வியாஸம் கூறியுள்ளது பற்றி வியாஸர் என்ற காரணப் பெயரைப் பெற்றவர். ஒவ்வொரு வேதத்தையும் ஒவ்வொரு ரிஷியிடம் ஒப்புவித்து அவற்றினைத் தக்க சிஷ்யர்கட்கு போதிக்கும்படி கூற, அவ்வாறே, வைசம்பாயனர் என்னும் ரிஷி யஜுர் வேதத்தை தமது நுண்ணறிவு வாய்ந்த சிட வர்க்கங்களுக்குப் போதிக்கத் தொடங்கினர்.

அப்படி அவர் போதிக்க முற்பட்ட முதல் பாடமே "சாந்தி" மந்திரம் எனப் பெயர். அம்மந்திரத்தின் கடையில் ஓம் சாந்தி என்று ஒரு முறை கூறி நிறுத்தாமல் மும்முறை ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று கூறி முடித்துள்ளார்.

மயிலின்புற மேல் வந்தருளி என் கவலை
கொன்றருள் நிறைந்த கழல் இன்றுதாராய்.

இம்மந்திரத்துக்கு வியாக்கியானம் செய்துள்ள ஸ்ரீ சங்கரபகவத் பாதாளும், ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகளும் விசேஷ அர்த்தங்கள் கூறியுள்ளார்கள்.

சாந்தி என்றால் சமாதானம், அமைதி, காமாதி மார்க்கங்களைக் கடந்த மன நிம்மதி என்று பொருள்.

அத்துடன் தீமைகள் நீங்கி நன்மை ஏற்பட வேண்டிச் செய்யும் ஓர் கிரியை என்றும் பொருள்.

ஓர் வித்தை, அதிலும் பிரும்ம வித்தையைச் சிஷ்யர்கட்குப் போதிக்கப் புகும்போது, முக்கியமாக குருவினிடம் அமைதி நிலவவேண்டும். உதாரணமாக, தினசரி வாழ்க்கையில் அமைதியற்ற ஓர் பள்ளி ஆசான், அன்று மாணவர்கட்குப் போதிக்குங்கால், கடுகடுத்தும் கோபக் குறிகளுடனும் நடந்து கொள்ளும் நிலைமைகளை பள்ளியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் அறியாமல் இருந்திருக்க முடியாது. ஆகவே சாந்தி முதலில் ஆசானிடம் துவங்கித் துலங்க வேண்டும்.

இரண்டாவதாகச் சீடர்களிடமும் அமைதி அவசியம். கவனக் குறைவுள்ள பையன்கட்கு எவ்வளவு கூறித்தான் பயன் என்ன?

மூன்றாவதாக வித்தையைப் பற்றிய சாந்தி. எந்த வித்தையை ஆசான் போதிக்க முற்படுகிறானோ அஃது ஜீவராசிகள் பால் கருணையை வளர்த்து துவேஷ மனப்பான்மையைத் தடுப்பதாக இருக்கவேண்டும் மற்றைய மதத்தினர் போல் ஒருவரை யொருவர் (Infidals,

---

அமலியோடுற் றழுந்துமெனை நீசற்
றிரங்கியிரு தாளைத் தருவாயே.

Coffirs) விரோதிகளாகக் கருதத் தூண்டும் போதனை நூல்களாக இருத்தல் கூடாது. தவிர, தாயுமான சுவாமிகள் கூறியது போல் நித்தியன், நிரஞ்சனன், நிராமயன் முதலிய எண்ணற்ற இலக்ஷணங்களோடு கூடிய சைதன்னியத்தை, இவ்வுலகிற்கு உபாதான காரணமும் நிமித்த காரணமுமான அந்த அழிவற்ற ஜோதிவடிவாகக் கூறப்படும் பரம் பொருளைப் பற்றியதாக இருக்கவேண்டும். அதன் ரூபமே "சாந்தி." ஆகவே இத்தகைய ஆழ்ந்த கருத்துக்களை அடக்கியே வைசம்பாயனர் மும்முறை இப்பதத்தை உபயோகித்துள்ளார் என்று கூறுகிறார்கள் நமது பெரியோர்கள்.

அவ்வாறே யாமும், இவ்வமிருத வசனியின் ஆசிரியரென்ன, வியாசங்கள் மூலம் பேருதவி செய்து வரும் பண்டித மணிகள் என்ன, இவர்கள் பால் என்றென்றும் சாந்தி நிலவுமாறு வேண்டுகின்றோம்.

மற்றும், இவ்வமிருதவசனியின் சந்தாதார்களில் பெரும்பாலோர் முருகனடியார்கள் என்பதை அறியப் பெருமிதங்கொள்ள இடமுண்டு. அவர்களிடமும், மற்றும் புத்தம் புதியதாக அமிருத வசனங்களைப் படிக்கப் போகும் பேரறிஞர்களிடமும் சாந்தி நிலவ வேண்டுகிறோம்.

இங்கு ஓர் குறிப்பு. சென்ற ஆண்டின் பன்னிரண்டு இதழ்களையும் கண்ணுற்றவர்கள்பால், இச்சஞ்சிகை உண்மையில் ஓர் "கந்தர் வசனி" யாக இருந்து "அமிர்த வசனி" எனப் புனைப் பெயருடன் வெளி வருகிறதோ

இங்கு வாவெனப் பண்பினு ழைத்து
எங்கு மானமெய்ப் பொருள்தாராய்.

என்ற சங்கை எழின், அதில் ஆச்சரியம் ஒன்றும் இராது. ஏனெனில், இச் சஞ்சிகையில், காமத்தின் சின்னங்களாகக் கூறப்படும் "கலையும், காதலும்" என்ற வியாச விமர்சனங்களோ, அல்லது ஜீவனுள்ள போதே நக்ஷத்திரங்களாக மாற்றுப் பெயர் பூண்ட மானிடர்களைப் பற்றியோ, தின சரி வாழ்க்கையைப் பற்றியோ அல்லது அதன் மர்மங்களைப் பற்றியோ வியாசங்களைக் காணவில்லை. பின்னர் கந்தரது பிரபாவம் அவரது அனுபூதி, அவரது தொண்டர் கூட்டங்கள், முதலியவற்றினைப் பற்றியே அதிகமாகக் கண்டிருக்கிறோம். இன்னும் அவதாரங்களில் கிருஷ்ணுவதாரமாக இருக்கிறார் கந்தர், என்ற ஸ்கந்த புராண வசனப்படி கண்ணனின் லீலைகள் என்ன, தன்வந்திரிபகவான், ஔவைப் பிராட்டியார், காரைக்கால் அம்மையார் இராமலிங்க சுவாமிகள் முதலியவர்களின் பிரபாவங்கள் என்ன, தியாகமூர்த்திகளின் கீர்த்தனங்களில் அடங்கியுள்ள தத்துவங்கள் என்ன, இவ்வாறுகிய சாந்தி நிலவப் போதிக்கும் வியாசங்களையன்றோ கண்டிருக்கிறோம்.

இனியும், இவ்வமுதபானத்தை யொத்த இச்சஞ்சிகையில், "சிரத்தயா தேயம், அசிரத்தயா நதேயம்" விருப்பத்துடன் கொடுத்தல் தக்கது, அசிரத்தையுடன் கொடுத்தல் தடுக்கப்பட்டது, என்ற ஸ்மிருதி நூல்படி, பொருத்தமுள்ள வியாசங்களை மகத்தான பேரன்புடன் பண்டித மணிகள் அளித்துவர முற்படட்டும். அவைகளைக் கண்ணுறும் நேயர்களும் அவ்வாறே பக்தி சிரத்தையுடன் ஒவ்வொரு வியாசத்தையும் ஊர்ந்து கவனித்துப் பயன் பெறட்டும்.

உறங்கி விழிப்பாய பிறந்த பிறப்பேனு
முரங்கொள பொற்பாத மருள்வாயே.

மேன்மேலும் "சுவரிருந்தாலும் சித்திரம் எழுத இயலாது" என்ற வாக்கியப்படி நேயர்கள் யாவர்களும் திட சரீரத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து ஆன்ம ஞானத்தையும் அடையும் போதனை முறைகள், சம்பந்தப்பட்ட வியாசங்கள், இச் சஞ்சிகையில் வெளி வருவதின் மூலம் நம் யாவர் பாலும் சாந்தி நிலவ இறைவன் அடிகளை வணங்குகின்றனம்.

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்.

11 ஆம் பை.

V. S. வெங்கடராமன்.

முதற்காசு : யசோதைப் பாலுக்குத் தனிச்சுவைதான்.

வீட்டு வேலைக்காரிகள் வேறு வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். யசோதையே தயிர் கடைய ஆரம்பித்தாள். கண்ணன் பாலலீலைப் பாடல்களைப் பாடிக் கொண்டே தயிர் கடைந்து கொண்டிருந்தாள். கண்ணன் நடுவில் வந்து மத்துக்கழியை அசையாமற் பிடித்துக் கொண்டு கடைவதைத் தடுத்தார். அப்படியே மத்தைச் சார்த்திவிட்டுக் கண்ணனை மடியில் வைத்துச் சிரித்துக் கொஞ்சிக் கொண்டே பால் கொடுத்தாள். கண்ணன் பால் குடித்துத் திருப்தியடையவில்லை. அடுப்பில் பால் பொங்கி வழிந்து போவதைக்கண்டாள். உடனே கண்ணனைக்

உயர்கதி பெறஅருளோங்கு மாமயி லுறைவோனே
விதமுறு பரிவோடு விழ்ந்து தாடொழ அருள்வாயே.

கீழே விட்டு விட்டுப் பாற் பானையை இறக்கி வைக்கச் சென்றாள். கண்ணனுக்கோ கோபம் வந்தது. கீழுதட்டை மேல்வாய்ப் பற்களால் அழுக்கிக் கொண்டு சிறிய மருந்துக் கலுவக்குழவியை எடுத்துத் தயிர்ச்சட்டிமீது தடாலெனப் போட்டார். ஓடினார். மறைவாக நின்று கொண்டே வெண்ணெயைத் தின்று கொண்டிருந்தார்.

இரண்டாங்காசு:—முன்பு உதவி செய்த குரங்குக்கு
இப்போது விருந்து

வெண்ணெயை உறியிலிருந்து எடுக்கப் போட்ட உரல் மேலேயே நின்று கொண்டு எதிரிலிருந்த தோழனை குரங்குக்கு வேண்டிய அளவு வெண்ணெயை உருட்டி உருட்டிப் போடுகிறார். இங்குமங்கும் கண்களைச் சுழல விடுத்துப் பார்க்கிறார். இடையிடையே தானும் ஓர் உருண்டையைப் போடுகிறார். ஒரே வாயால் விழுங்குகிறார்.

பாலை இறக்கி வந்த யசோதை சமாசாரங்களை யறிந்து கண்ணனுக்கு முதுகுப் பக்கமாகக் கையில் ஒரு கோல் எடுத்துக்கொண்டு மெள்ள வந்தாள். அம்மாவின் கையில் கோலைக்கண்டதும் தொப்பென்று குதித்து ஓட்டப் பந்தயம் விட்டார். யசோதைக்கோ ஓடமுடிய வில்லை. சிரமப்பட்டுக் கண்ணனைப் பிடித்துக் கொண்டாள். கண்ணன் அழ ஆரம்பித்து விட்டான். கண்களைக் கைகளால் கசக்கிக் கொண்டிருந்தான். கண்ணில் இட்டிருந்த மை அத்தனையும், முகமுழுவதும் பட்டை பட்டையாகத் தீற்றப்பெற்றன. கண்ணீர் மழையெனப் பொழிகிறது. மிரள மிரள விழிக்கிறார்.

சிவை பரம்பரை யாகிய பார்வதி அருள்பாலா
ஞானநல் வழி பெறும்படி நாயடி யேனை நினருள்தாராய்.

மூன்றுங்காசு:— அடிக்க மனம் வருமோ.

யசோதை அதட்டினுள்! ஏனடா இந்த முரட்டுத் தனம், சட்டியை உடைத்தாயா? வெண்ணெயைத் தின்ருயா, என்று சொல்லிக்கொண்டே அதட்டி விட்டுக் கோலேக் கீழே எறிந்து விட்டு உரலண்டை இழுத்து வந்து சாதாரணக் குழந்தையைக் கட்டுவது போல் கயிற்ருல் கட்டிப் போடலாம் என்றெண்ணினுள்.

நான்காங்காசு:—எதுவுமே இரண்டங்குலம் குறையுமோ

யசோதை ஒரு கயிற்றை எடுத்தாள். உரலோடே கண்ணனையும் சேர்த்து இரண்டு மூன்று சுற்றுக்கள் சுற்றினுள். முடிச்சுப் போட இரண்டங்குலம் போதவில்லே. மற்ருெரு கயிற்றை எடுத்து முடி போட்டாள். அதுவும் 2 அங்குலம் குறைந்தது. வீட்டிலுள்ள கயிறுகள் எல்லாவற்றையும் பக்கத்திலிருந்தவர் எடுத்துத்தர எடுத்துத்தர, முடி போட்டு முடி போட்டுப் பார்க்கப் பார்க்க ஒரே சிரிப்பாய்ச் சிரிக்கச் சிரிக்க இதுவும் இரண்டங்குலங் குறைகிறதே என்று யசோதை தானும் சிரித்துக் கொண்டே விரல்களுங் கையுஞ் சோர்ந்தன, சிவந்து விட்டன. என்ஞல் கட்டிப்போடக் கட்டோடே முடியாது என்று சொல்லி வியந்து கட்டுவதை முடித்தே விடுவது என்றெண்ணியிருந்தாள்.

ஐந்தாங்காசு:—தாயின் துயரம் தாங்கமுடியுமோ.

கண்ணன் மனசுக்குள்ளே சிரித்து விட்டார். அம்மா உடம்பெல்லாம் வேர்த்து விட்டனவே. முடிச்சுப் போடத்

துக்கமறுத் துக்கமலப் பொற்பதம்மைத் துப்பதவிச் கத்தியனேப் பத்தரில்வைத் தருள்வாயே.

திறைப் போக அம்மாவின் முடியும் அவிழ்ந்து விட்டது. இனிச் சோதிக்கக் கூடாது என்று கண்ணன் திருவுளங் கொண்டான். பக்தர்கள் செய்வதைப் பிரியத்துடன் ஏற்பது பகவானின் செயலல்லவோ. அம்மா கட்டட்டுமே என்று கண்ணன் நினைத்ததும் யசோதை "இப்போதுதான் உன்னைக் கட்டிப் போட முடிந்ததென்று" சொல்லிக் கொண்டே உரலில் கண்ணனைக் கட்டிப் போட்டாள்.

கண்ணனாகிய யானைக் கன்றுக்கு உலகில் மூன்றே மூன்றுகட்டுத் தறிகள் தாமே உள. ஒன்று தாய்மார் களான கோபிகைகளின் கொங்கைத் தாமரை மொக்குகள். இரண்டாவது அடியார் மனம். மூன்றாவது உரல் ஆயிற்று. ஸ்ரீ லீலா சுக யோகீந்திரர், கண்ணபிரானை யசோதை உரலிற் கட்டின திருவிளையாடலை எண்ணி எண்ணிப் பாடிப் பாடி இன்புறுத்துகிறார்.

"உலூகலம்வா யமினும் மனோ வா
கோபாங்கனானும் குசகுட்மளம் வா
முராரி நாம்ன: கலபஸ்ய நாகம்
ஆலானம் ஆஸீத் த்ரயமேவ பூமௌ."

கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

ஐந்து உலோகங்களில் ஒன்று செம்பு. அதில் களிம்பு உண்டு ; ஒருவகை மணம் உண்டு ; சிவந்த நிறமும் உண்டு. செம்பை எந்தப் பக்கம் வெட்டினாலும் சரி ; வெட்டு

இளமையுமு ளமுகுபுனே யிராறு தோள் நிரையும்
இருபதமு மறுமுகமும் யானே தஞானமதை யருள்வாயே.

வாயில் களிம்பு விளங்கும். களிம்பு வியாபகம் ; செம்பு வியாப்பியம். களிம்பு உள்ளவரை செம்பிற்குச் சிறப்பில்லை. மதிப்பழித்த களிம்பு மாய, வழியில்லையா ! இருக்கிறது. அற்புத ரசகுளிகையின் தொடர்பு உண்டானால், செம்பின் சொரூபத்தை மறைத்த அந்தக் களிம்பு அழியும். களிம்பு கழிந்ததும், செம்பின் நிறம் மாறும் ; மணமும் மாயும் ; அதனுடன், செம்பென்னும் பெயரும் தீரும் : பிறகு அது பொன்னாகிப் பொலிவடையும்.

செம்பு போலவே இருக்கிறது ஜீவன் நிலை, பாருங்கள் !

செம்பில் இருந்த களிம்பு போல், ஆன்மாவில் வியாபித்துள்ளது **ஆணவம்**.

செம்பிலிருந்து எழுந்த மணம் போல், காரண உடலிலிருந்து பெருகி வருகிறது **கன்மமலம்**.

செம்பில் சிவப்பு நிறம் இருந்ததுபோல், காரண தேகத்தில் **மாயாமலம்** கலந்திருக்கின்றது.

கண்ணை மறைக்கும் ஆணவம் தூய கருத்தையும் சிதைக்கும். அம்மட்டோ ! தன்னையும் காட்டாது ; மகத்தான ஆன்ம சொரூபத்தையும் மறைக்கும். அவ்வகையில், ஆணவம் வியாபகம் ; ஆன்மா வியாப்பியம். வியாப்பியம், வியாபகத்துள் அடங்கும். அங்ஙனம் வியாபித்து, ஆன்மாக்களை அணுக்களாக்குவது ஆணவத்தின் தொழில்.

அதன் வியாபகத்தால் முழு மறதி, முழு அறியாமை, முழு இருள், பெருந்துன்பம் என்னும் இவைகளே ஆன்மாக்கள் அடைகின்ற பயன்.

பரஞகிய தவத்தில் வந்தருள் பாலக்கு பாகர
சிவயோகமு ஞானமு மருள்வாயே.

இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட
என்னையும் கண்டிலேன் என்னேடி தோழி

என்ற தாயுமானார் பாடல், இங்கு நம் நினைவிற்கு வருகிறது. அற்புத ரசகுளிகை செம்பின் களிம்பை அகற்றுவது போல், உயிர்கட்குப் பக்குவத்தை உண்டாக்கி, அழியாத ஆணவ இருளை யகற்றவல்லது அறுமுக ஞான ஒளி.

இன்னும் ஒரு செய்தி. உமி உண்டு ; தவிடு உண்டு ; முளையும் உண்டு ; அரிசியொடு இம்மூன்றும் அநாதியாக உள்ளவை. எனினும் உரலிலிட்டுக் குத்தும் போது, அம்மூன்றும் அகலும். அதுபோல், அநாதியான ஆணவம், அறுமுக தெய்வ ஒளியின் எதிரில் தன் ஆற்றல் கெட்டு அடங்கும். நெகிழாத முதன்மை ஆணவம் நீங்குமானால், இடைவந்த மாயையும் கன்மமும் தாமே மாயும்.

அந்தக் காலம் பிறக்கும் வரைக்கும், ஆணவத்தின் தொடர்பால் எப் பொருளினும் மோகம் எழும் ; மோகம் உள்ளவரையில் விடுதலை யில்லை ; விடுதலைதான் வீடு பேறு.

பக்குவ காலம் வந்தால், ஆணவ இருள் பறந்தோடும்; அதன்பின் விளைவது விமல இன்பம் என்று சாற்றுகின்றன சாத்திரங்கள்.

சொல்வது சுலபம். பக்குவம் என்றால் பொருள் என்ன ? அப்பக்குவம் எப்படிப் பிறக்கும் என்று விசாரிக்க வேண்டாமா !

நான் மறதி மயம் ; இருள் மயம் ; அறியாமை மயம்; துன்ப மயமாகத் துவள்கின்றேன் ; இது என் அநுபவம் ;

பிறப்பெ னுங்கட லழியலோ ழுந்திட்
டடுத்தீ ருந்திரு வடிதனை யென்றுந் நீடுவேனே.

இவையகல வழியிலேயா என்ற சிந்தனை யிடையறுது எழ வேண்டும். சிந்தனைப் பெருகப் பெருக, மேலுரைத்த நான்கும் ஆணவச் சார்பால் அமைந்திருக்கின்றன. அகல வேண்டும் அது. அதன் பிறகுதான், நான் யார் என்று உணர இயலும் என்று எண்ணுகிற பருவந்தான், பக்குவ காலம் எனப் பெறும். மலபரிபாகம் என்றும் பொருள் அதுதான். ஆனல், ஆணவக் கருவறையில் கண்ணிலாக் குழவிபோல் கட்டுண்டிருக்கும் ஆன்மாவிற்கு, இவ்வளவு பெரிய சிந்தனை பிறக்க ஏது இடம்? அதனல், வழிதுறை யறியாமல் உயிர்கள் வாடுகின்றன.

இந்நிலையில், ஆணவத்துள் கிடந்து அறிவு மயங்கும் ஆன்மாக்களுக்குப் பரிபக்குவம் பிறக்கப் பார்க்கின்றான் பரம குமரன். அவன் கடைக் கண் கருணையிலிருந்து சுழல்கிறது சுத்த மாயை. அந்த சுழற்சியி லிருந்து எழு கிறது அசுத்த மாயை. வியக்கும் அதனிலிருந்து, பிரகிருதி மாயை விரிகிறது. உயிர்களை, உடலளிக்கும் அந்த மூன்று மாயைகளுடன், உடன்படுத்துகிறன் உமாசுதன்.

அம்மட்டோ! மந்திர வழி, பதவழி, எழுத்து நெறி, கலைநெறி, தத்துவ நெறி, புவனமார்க்கம் என்னும் ஆறு வழிகளையும், அண்டத்தில் நிறைந்த இன்னும் பலவுள வழிகளையும் பிணைதது, உயிர்களை அவ்வழிகளில் சேர்ப் பிக்கிறன் சிவகுமரன்

மூன்று மாயையுடன் சேர்ந்து, ஆறு வழிகளையும் பிற நெறிகளையும் அறிந்த ஆன்மாக்கள், மாறி மாறிப் பிறக்கின்ற இருப்பு அற்புதமாக அமைகிறது.

காலமுழு வைந்து ஞானவெளி கண்கள்
காரண அருளென்று பெருவேனே.

(1) முட்டையி லிருந்து சில உடல்கள் முளைக்கின்றன.

(2) கருப்பையி லிருந்து சில உடல்கள் காட்சி யாகின்றன.

(3) வேர்வையி லிருந்து சில உடல்கள் வெளி வருகின்றன.

(4) கிழங்கு, வித்து முதலியவைகளிலிருந்து, சில உடல்கள் கிளைக்கின்றன. நால்வகைத் தோற்றம் இங்ஙனம் நண்ணுகின்றது.

(1) மரம் செடி கொடிகள்; (2) பாம்பு எறும்பாதிய; (3) மீன் தவளை முதலியன; (4) விலங்குகள்; (5) பறவைகள்; (6) மக்கள்; (7) தேவர்கள் ஆக எழுவகைப் பிறப்புகள் இவ்விதமாக எழுகின்றன.

நால்வகைத் தோற்றத்தில் எழுவகைப பிறப்புகள் எழுதற்கு, எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் எங்குமாகி இருக்கின்றன.

ஆக்கை யில்லாது அந்தரத்தில் அவதியுற்ற ஆன்மாக்கட்கு, தம் நிலைமையை உணர இங்ஙனம் உடம்புகள் தருகின்றான் உமைகுமரன்.

உணர்வு உதயமானுல், உய்ந்து கடைத்தேறும் உயிர்கள்.

"ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி, அது
பூதி யடை விப்பதொரு பார்வைக்காரன்"

என்கிற அருணை முனிவர், ஆறுமுகப் பெருமானது அருள் நோக்கையும், அதனுல் விளையும் இன்பத்தையும் உணர்ந்து உருகுவதை உணர்த்துகின்றன இந்த அடிகள்.

செஞ்சொல்சேர் சித்ரந் நமிறாஜுன்
செம்பொனுர் வத்தைப் பெறுவேனே.

இந்த இரண்டு அடிகளுக்கும் விரிவுரை செய்பவர் போல,

இருள்மலத்துள் மோகம் உறும் பல்லுயிர்க்கு முத்தியளித்
தற்குமல
பாகம் உறவே கடைக்கண் பாலித்து,—தேகம்உற
தந்த அருஉருவம் சார்ந்தவிந்து ; மோகினி ; மான்
பெந்தம் உறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்
ஆறு அத்துவாவும்; அண்டத்து ஆர்ந்த அத்துவாக்களும் முன்
கூறத் தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து—மாறிவரும்
ஈரிண்டு தோற்றத்து, எழுபிறப்புள், யோனி எண்பான்
ஆரவந்த நான்கு நூறு ஆயிரத்துள்

(இருள் மலம் - ஆணவம். மலபாகம் - மலபரி பாகம்; மலம் கழலும் பக்குவம். தேகம் உற - உரு எடுக்கும்படி. விந்து - சுத்த மாயை. மோகினி - அசுத்த மாயை. மான் - பிரகிருதி மாயை. பெந்தம் - பிணிப்பு. அத்துவா - வழி. சிமிழ்ப்பு - கட்டு; பிணிப்பு. மாறிவரும் - மாறி மாறி நேர்கிற. ஈரிரண்டு தோற்றம் - நான்கு வகைத் தோற்றம். எழுபிறப்பு - ஏழுவகைப் பிறப்பு. எண்பான் - எண்பது. ஆரவந்த - பொருந்த அமைந்த. எண்பான் நான்கு நூறு யிரம் — எண்பத்து நான்கு லட்சம். யோனி - கருவின் வேறுபாடுகள்.)

விறுவிறுப்புத் தோன்ற இவைகளை விளக்கிக் குமர குருபரர் பாடும் இந்த வெண்பா அடிகள், நம் உள்ளத்தை அள்ளுகின்றன. ஸ்ரீ கந்தப் பெருமான் அருளொழுகும் கடைக்கண் ஞோக்கால் நிகழ்ந்த, நிகழ்கின்ற, இனி நிகழ இருக்கிற அற்புதங்களை அடுத்த இதழில் காண்பம்.

வத்து ஞானப் பொருளில் ஒன்று போத்து உவது
மஞ்சுநாளைத் தினமும் அருள்வாயே.

இன்பமும் துன்பமும்

(அ. மு. பரமசிவானந்தம்)

உலகில் பிறந்த மனிதன் என்றும் விரும்புவது இன்பமே. துன்பச்சுழல் அவனை அறியாமலே அவனைப் பின்பற்றுகின்றது. என்றாலும் அவன் அதை வரவேற்ப தில்லை. 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற எண்ணத்திலேயே மனிதன் வளர்கின்றான். துன்பத் தைக் கண்டு நடுங்குதலும், இன்பம் பெறின் இறுமாப் பதும் மனிதனது இயற்கையாக அமைந்து விட்டது. ஆனால் அவன் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இன்பதுன்பங்கள் மாறி மாறி அவன் வாழ்வில் மேடு பள்ளங்களை அமைக்கின்றன. சாதாரண மனிதன் இவ் விரண்டின் நிலையில் வாட்டம் பெறுவதும் வாழ்வுபெறு வதும் இயற்கை என்று எண்ணி காலத்தேவன் காட்டிய வழியே தன் வாழ்நாளைக் கழிக்கின்றான். இரண்டிலும் வேறுபாடு அவன் உள்ளத்தில் எழுகின்றது. தன் வாழ்வு வளமாக இன்பந்தான் தேவை என்று எண்ணுகிறது அவன் உள்ளம். ஆனால் அறிஞர் உள்ளமோ—ஆண்டவனது அடியவர் உள்ளமோ வேறுவகையில் அமைவ தாகும். அவர்களும் மக்களினத்துக்கு உட்பட்டவர்தாம். அவர்களுக்கும் இன்பதுன்பம் இரண்டும் மாறி மாறி வருகின்ற நிகழ்ச்சிகள்தான். ஒவ்வொரு அறிஞரும்—அடியரும் இரண்டையும் பெற்று மாறி மாறி வாழ்வுச் சகடத்தில் வந்து கொண்டிருபபவர் தான். ஆனாலும் அவர்கள் அந்த இரண்டையும் நோக்கும் முறையே ஒரு

கத்பேற விதியிலி மதியிலி புனதிரு
கச்சுற றச்சிறு செச்சைப் பத்மப தம்பெறேனே.

தனி. சாதாரண மனிதனது நோக்குக்கும், அறிஞரது அறிவாற்றல் காட்டும் நோக்குக்கும் எத்தனையோ வேறு பாடு உண்டு. அறிஞன் துன்பம் வந்தால் மகிழவேண்டும் சிரிக்க வேண்டும் என்கிறான். ஆனால் அது மனிதனால் ஆகக்கூடிய காரியமா? 'ஐயோ துன்பமா' என்று அஞ்சி ஓடும் அவலவாழ்வில் வாழும் மனிதனுக்கு இந்த 'நகுதல் வேண்டும்' என்ற நல் உபதேசம் ஏற்குமா? ஏற்காது தான். என்றாலும், மனிதன் உண்மையில் மனிதனாக வாழவேண்டுமாயின் அந்த அறிஞர் காட்டிய அறநெறியை மேற்கொள்ளத்தான் வேண்டும். அப்போதுதான் உண் மையில் அவன் வாழ்வு மலர்ந்த வாழ்வாகும். மகிழும் வாழ்வாகும்.

திருவள்ளுவர் உலகை உண்மையில் பகுத்தறிந்த ஒப்பற்ற அறிஞர். அவர் இன்பதுன்பங்களை எப்படி ஏற்கவேண்டும என்பதை விளக்கிக் கூறத் தயங்கவில்லை. இன்பம் வந்தால் மகிழ்ச்சி பொங்கத் தன்னை மறந்து ஆடும் மனிதன் துன்பத்தில் வாடும் நிலையைக் காண்கிறார். ஏன் இந்த வேறுபாடு என்ற எண்ணம் அவர் உள்ளத்தே முகிழ்க்கின்றது. என்ன செய்வது, உலகம் இப்படித் தானே இருக்கிறது என்று எண்ணி அமைதி பெறு கின்றார் அவர். என்றாலும் எப்படி அவற்றை ஏற்க வேண்டும் என்பதை மட்டும் அவர் கூறாது விடவில்லை.

'இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃது ஒப்பதில்'

என்ற சொற்கள் நின்று நின்று ஒன்றன்பின் ஒன்றாக அவர் வாயிலிருந்து வருகின்றன. துன்பம் வரும் போது

மிடைபடுமல மாயை யால்மிக கலவிய அறிவேக சாமிநின்
விதரணசிவ ஞான போதகம் வந்துதாராய்.

புன்சிரிப்பு கொள்ளச் சொல்கின்றார். 'ஐயோ இது நடக்குமா' என்று சிலர் அலறலாம் ஆனால் அவ்வாறு சிரித்து வரும் துன்பததை வரவேற்றவர்களே உலகில் பெருந்தலைவர்களாக, உளத்திண்மை கொண்ட உரவோராக வாழ்ந்ததை வரலாறு காட்டுகின்றது. அப்பர் எத்தனையோ துன்பங்கள் பெற்றார். பெற்ற துன்பங்களை யெல்லாம் எண்ணி எண்ணி அவர் மூலையில் உட்கார்ந்து வருந்திக் கொண்டிருக்கவில்லை. துன்பத்தை எல்லாம் தூய உள்ளத்தோடு 'வருக' என்று வரவேற்றார். மதம்பொருந்திய யானை, கொலையானை, பாகனால் செலுத்தப்பட்ட பருயானை அவரை நோக்கி விரைந்து வருகின்றது. அதன் அசைவினால் பல மக்கள் கீழே விழுந்து விடுவார்கள். மதத்தால் மதர்த்து வரும் அந்தக் கொடிய யானை அப்பர் உள்ளத்தை என்ன செய்தது. அஞ்சவைத்ததா? வாட வைத்ததா? துன்பில் உழலவைத்ததா? இல்லை. அவர் முகத்தில் குறுநகை அரும்பிற்று. இத்துன்பம்-கொடுமை என்ன செய்யும் என்ற எண்ணத்தை உண்டாக்கிற்று. அனைத்துக்கும் மேலாக அவர் உள்ளத்தே அஞ்சாமை முகிழ்த்தது. 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்று வாய் முணுத்தது.

> பல பல காமத்தராகிப் பகைத் தெழுவார் மனத்துள்ளே
> கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்
> வலமேந் திரண்டு சுடரும் வான் கயிலாய மலையும்
> நலமார் கெடிலப் புலனும் உடையார் ஒருவர் தமர் நாம்
> அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை

என்று இசைத்தது அவர் நா.

பகிரவொரு தீனையளவு பன்புகொண் டண்டிலன்
தவநெறியி லொழுகிவழி பன்படுங் கங்கணஞ் சிந்தியாதோ.

அப்பர் மட்டு மன்றி பல சமயத்தலைவர்களும் அவ்வாறே அல்லலுக்கு இடையில் அமைதி கண்டனர். புத்தர் உலகம் அமைதி பெறுவதற்காகத்தான், தனது இன்பங்களையும் அரசபோக வாழ்வையும் விட்டு அல்லலை மேற்கொண்டு அலைந்தார். இயேசுவும் உலகத்தார் உய்வதற்காகவே தமக்கு வந்த கொடுமைகளை புன்சிரிப்போடு மகிழ்ந்து ஏற்றார். இன்று நம்மிடை வாழ்ந்து நமக்கென மாய்ந்த அண்ணல் காந்தி அடிகளார் மக்கள் பொருட்டே அத்தனைத் துன்பங்களையும் ஏற்று, இறுதியில் கூப்பிய கையுடன் குளிர்ந்த உளத்துடன் குண்டுகளை ஏற்று மண்ணில் சாய்ந்தார். அவரெல்லாம் செயற்கரிய செய்த பெரியா ராயினர். எனவே துன்பம் வரின் இன்முகத்தோடு அதை ஏற்றுக் கொள்ளல் மனிதப் பண்பாடு என்பது நன்கு விளங்குகின்றது. அவ்வாறு ஏற்றுக் கொள்ளின் உலகில் யாருக்கும் அஞ்சவேண்டிய அல்லல் நம்மைப்பற்றாது. அதுதான் உண்மைச் சமய நெறியுங்கூட. அன்று அப்பர் பெற்ற துன்பத்திற்கு அஞ்சி அழுது மாய்ந்திருப்பாராஞல் இன்று நமது சமயம் எங்கே? சமயநெறி எங்கே? அது போன்றே பிற சமயங்களும்.

அன்பு நெறிஓம்பிய அண்ணலார் மாணிக்க வாசகர். அவர் ஆண்டவனை 'இன்பமே என்னுடைய அன்பே' என்று ஏத்திப் பாட்டிசைக்கும் பண்பாளர். ஆண்டவனை இன்பமாகக் கண்ட ஏந்தல் தமக்கு இன்பம்தான் வேண்டும் துன்பம் நீங்க வேண்டும் என்று அவர் அவ்வாண்டவனை வேண்டவில்லை. இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வேறுபாடு காணுவகையில் அவர் போன்ற

விடரிவு முதிர அரியதமி ழோசை யாகவொலி
வசன முடையவழி பாடு சேருமருள் தந்திடாதோ.

உளப்பண்பாடு பட்ட மக்கள்-அடியவர் வாழ்ந்து வந்தனர். என்றாலும் இன்பம் வந்தால் - களிப்பு பொங்கினால் ஒரு வேளை தன்னை மறந்து, கடனும் முறைமும் நெறியும் கைவிடப்படுமோ என்று அஞ்சுகின்றார் மணிமொழியார். அவர் கண்டது 'களிப்பில் கலக்கம்.' துன்பில் கலக்கமுறும் இவ்வுலக மக்களுக்கு இந்த மேனெறியை எண்ணிப் பார்க்கக்கூட முடியாதுதான். துன்பத்தில் புன்முறுவலும் களிப்பில் கலக்கமும் கருத்தெட்டாப் பொருள்கள்தான். என்றாலும் அந்தக் கலங்கரைவிளக்கம் தான் அடியவரை அல்லற் கடலில் இருந்து அருட் கரைக்கு வருக என்று அழைத்தது. பெற்ற பெருநெறியை வாய்விட்டும் கூறி விட்டார் மாணிக்கவாசகர். 'களிப்பெலாம் மிகக் கலங்கிடுகின்றேன்' என்று அவர் வாய் சொல் வழிந்தது.

அளித்து வந்தெனக்கு ஆவஎன் றருளி
அச்சம் தீர்த்த நின் அருட்பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே
வளைக்கையாளொடு மலரவன் அறியா
வானவா மலைமாதொரு பாகா
களிப்பெலாம் மிகக் கலங்கிடுகின்றேன்
கயிலை மாமலை மேவியகடலே.

என்பது திருவாசகம்

'அஞ்சுவது யாதொன்றும் இல்லை' என்று துன்பத்தினிடையில் எழுந்த அப்பரது அஞ்சா மொழியும், 'களிப்பெலாம் மிகக் கலங்கிடுகின்றனே' என்ற இன்பக் களிப்பில் எழுந்த மணிமொழியாரின் கலக்க மொழியும் ஒவ்வொருவர் உளத்தினும் அமைய வேண்டும். அமையின்

மங்கா நற்பொருள் விந்தா வற்புத
மென்றோ யிப்படி அருள்வாயே.

இன்ப துன்பங்களின் வேறுபாடு இல்லையாக முடியும். நாம் இன்பம் பெறுதற்காகப் பிறரை வாட்டும் கொடுமை ஒழியும். துன்பத் திரையால் மறைக்கப்பட்டு, அத்துன்பம் செய்தார் யார் என்று கண்டு அவர் மேல் பழி தீர்த்துக் கொள்ள எண்ணும் பகைமை உள்ளத்தில் இடம் பெறாது. இன்பம் வந்த காலத்து, தன்னை மறந்திருந்து அந்த மறதியில் தன் சுற்றுப்புறத்தையும் அங்கே வாழும் உயிரினத்தையும் எண்ணாது, அவற்றைத் துன்பத்தில் வாடவிடும் எக்களிப்பும் இல்லாது ஒழியும். வாழ்வில் மாறி மாறி வரும் இன்பதுன்பங்களுக்கு எத்தகைய வேறுபாடும் காணாவகையில், அவரவர்தம் வாழ்க்கைச் சகடம் அமைதியாகக் குறித்த பாதையில் சென்று கொண்டிருக்கும். அப்படிச் செல்வதுதான் தெய்வநெறி.

அந்தப் பெரு நெறியைப் பெற்று வாழ்வது அனைவருக்கும் அவ்வளவு எளிதல்லதான். என்றாலும் அந்த நெறியைப் பின்பற்றவாவது முயற்சிக்க வேண்டாமா? அந்நெறியே மனிதனை மனிதனாக வாழவைக்கும். பொறாமை வஞ்சகம் முதலிய கேடுகளிலிருந்து மனிதனை மீட்கும் உளம் அமைதியுறும். உள்ளம் ஓங்கும். இடைவிடா இன்பதுன்பங்கள் நம் வாழ்வில் இடைவிடாதிருப்பினும் எதற்கும் அஞ்சாத அன்புவாழ்வை நம்மிடை-நாட்டிடை - உலகிடை - உயிரிடை - உலவச் செய்ய இந்த ஒத்து நோக்கும் பெருநெறியே சிறந்தது. நாமும் மனிதராகப் பிறந்ததற்காக ஒரு அளவாவது அந்நெறி நோக்கி முன்னேறுவோமாக.

பலதவங்களாலுனை மொழியும் புத்திகள் தெரிந்து நானுனை
நிகர்சந்தத்தமிழ் சொரிந்து பாடவும் அருள்தாராய்.

பக்தியும் இசையும்

ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் தெய்வீக இசைப் பொருள் விளக்கம்.

[கீழ்வேளூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை]

ஆண்டவன் படைப்பில், மனிதன், விலங்கு, பறவை, என்னும் மூன்று வர்க்கங்களில், மனிதனுக்கு ஆறு அறிவும், விலங்கிற்கு ஐந்து அறிவும், பறவைக்கு நான்கு அறிவும், அளித்துள்ளான்.

இதனுள் மனிதனைத் தவிர இறைவனை அறிந்து இனிப் பிறவி யெய்தா வண்ணம் செய்துகொள்ளும் பகுத்தறிவு மற்ற இரு இனங்கட்கும் இல்லை யாயினும், மனிதன் இறைவனின் இன்னருள் தன்மையை அந்த இனங்கள் வாயிலாகவும் அறிந்து ஆனந்தமடைய இச்சிக்கின்றான்.

இதன் தத்துவமே நமது பத்ராசல ராமதாசரின் பக்தி வழிப் பண்பாடு உணர்த்துகின்றது.

தனது மனமாகிய கிளி, தன்வழி நில்லாது எப்போதும் உலக மாய்கையாம் பலவழிகளிலும் சென்று அலைந்து பல கனிகளையும் தின்று அந்த ஸந்தோஷத்திலேயே காலங் கழித்து வருவதால், இந்த மனமாகிய கிளி, தான் தின்ன வேண்டிய உத்தமமான கனியைத் தின்று கடைத்தேற முயலாது காலங்கழித்து வருவதால் அதனின் அறியாமைக்கு இரங்கி நமது ராமதாஸ் ஸ்வாமிகள் சம்போதனம் செய்கிறார்.

கமல பாதமும் புயமி ராறு மிந்துன பல்
தோட லங்கலணி மார்ப மும்பகிவு லங்கொள்வேனே.

எனது மனமாகிய கிளியே! அன்று நான் நான்கு அறிவு படைத்த பச்சைக்கிளியைக் கொண்டுவந்து, அருமையாக வளர்த்து, அதை ராமநாமம் சொல்லச் செய்து அது சொல்வதைக் கேட்டுக் கேட்டு பரவசம் அடைந்ததோடு, நானும் சொல்லி எப்படி எல்லாம் மகிழ்ந்து கொண்டு இருந்தேனல்லவா? இவையெல்லாம் உனக்குத் தெரியாதா? என்ன; எனது மனமாகிய கிளியே! அப்படி இருந்தும் நீ ஒரோர் சமயம் எங்கெங்கோ செல்கிறாயே; மற்ற உலக சுகமாகிய கனிகள் எல்லாம் உன் உடலுக்கு அனுகூலமாக இருப்பினும் உயிருக்கும் உடலுக்கும் இரண்டினிற்குமே அனுகூலமான ராமநாமக் கனியை உண்ண அலையமாட்டே னென்கிறாயே என்று வருந்தி (என்ன கானு ராம பஜன கன்னமிகிலுன்னகதா) மனிதன் சொன்னாலும், நான்கு அறிவை உடைய பறவை இனமாகிய கிளி சொன்னாலும் ராமநாமக் கனி எவ்வளவு ருசியாக இருக்கின்றது, நீ உணரவில்லையா மனமே, என்று வருந்திப் போதிக்கின்றார்.

மேலும் உலகம் யாவையும் காக்கும் கர்த்தனாகிய ராமச்சந்த்ர மூர்த்தியை நினை மனமே; இதை விட்டு விட்டு உனது ஜன்மம் கடைத்தேற மற்ற மற்ற வேறு வேறு தெய்வங்களை வேண்டிக் கொள்வதாலும் பயனில்லை மனமே; ஆதலால் நீ ராமச்சந்திர மூர்த்தியை அல்லாது வேறு எந்தத் தெய்வங்களையும் நினைந்து வீணில் காலங் கடத்தாதே; சொன்னேன். கேள். என்கிறார்.

இத்துடன் இந்த மனத்திற்குத் தனது நடப்பையே ஓர் உதாரணமாகக் காட்டி விளக்குகிறார்.

சந்ததமும் வந்திரும் பரிமளப் பங்கய பதங்களேன்
கொடுவினைச் சஞ்சல மலங்கெடும்படி யருட் புரிவாயே

நான் ஒரு கிளியை வளர்த்து அதற்கு ராமநாமம் சொல்லித் தந்து, அது சொல்வதை காது குளிரக் கேட்டு, மனங்குளிர நானும் சொல்லி வாழ்ந்தபோது, நீயும் கூட இருந்து காணவில்லையா? மற்றும் எனது இந்த செயலைக் கண்டு அந்த பத்ராசல ராமன் என்னிடத்தில் ஆசை கொண்டு கருணையோடு நான் வேண்டிய எல்லா நலங்களை யும் தந்ததோடு, மனிதப் பிறவி அடைந்ததாலாகிய பயனை யும் அவன் தரவில்லையா (அதாவது இனியும் இவ்வுலகில் வந்து பிறந்து அல்லலுறா வண்ணம் ஆட்கொண்டு ரக்ஷிக்க வில்லையா) என்பது இதன் தத்துவம்.

ஆதலால் ஆறறிவு படைத்த மனித இனமாகிய நீங்கள் எல்லாம் உங்கள் மனமாகிய உலக விஷயாதிகளில் பறந்து பறந்து சென்று உழலும் கிளியை ஆண்டவனாகிய அழி யாக் கனியைப் பறந்து சென்று பருகப் பயன் படுத்திக் கொள்ளுங்கள் என்று உபதேசிக்கிறார், ராமதாஸர் தன்னையே இலக்காக வைத்து.

ராகம். காமவர்த்தனி. தாளம். ரூபகம்.

ஆ. ஸரிகம பதநிஸ்
அ. ஸ்நிதப மகரிஸ

பல்லவி

என்ன கானு ராம பஜன
கன்ன மிகி லுன்ன கதா—எ

அநுபல்லவி

சன்னு திஞ்சு ஸ்ரீராமச் சந்த்ரு தலசவே மனசா
கன்ன வின்ன வாள்ளுவேடு கொன்ன னேமி பலமுமனஸா—எ

வண்கலியை சுற்றி வந்திடு பதத்தை
வந்தனை செய் புத்தி தருவாயே

சரணம்

ராம சிலுக ஒகடி பெஞ்சி ப்ரேம மாட லாட நேர்பி
ராம ராம ராம யனுசு ரமணீ யொகதே
ப்ரேம மீர பத்ராத்ரி தாமுடைன ராம விபுடு
காமி தார்த்த பலமு விச்சி கைவல்ய மொஸக லேதா—எ

இந்த கருத்தமைந்த பாட்டை காமவர்த்தினி என்னும் ராகத்தில் இணைத்துப் பாடியுள்ளார்.

காமவர்த்தனி ராகக்கருத்து, தனக்கு மிகவும் ப்ரீதியாக உள்ள தனது குழந்தையானது நன்மார்க்கத்தில் செல்ல வேண்டி இருக்க, அது தவறான மார்க்கத்தில் செல்லுமாயின், அது கண்ட தாய் மிகவும் விசனித்துத் தன் நல் நோக்க உணர்ச்சி தென்பட தனது பிள்ளையை மிகவும் வேண்டிக் கொண்டு, இதனால் தனக்கிருக்கும் மனத் துன்ப உணர்ச்சியையும் தெரிவிக்கும் பண்பும் தொனிக்கக் கேட்டுக் கொள்ளும் **தாயன்பு நிகழ்ச்சி ஒலிச்சேர்க்கை யாகும்.**

இதனாலேயே நமது ராமதாஸர் தனது மனமாகிய அறியாக் குழந்தைக்கு இந்த தத்துவத்தை, அன்பாகவும் அருமையாகவும் எடுத்துரைத்து, அதற்காகத் தான் வருந்தும் நிலைமையையும் உணர்த்தி தன்னுடைய எண்ணத்தைப் பின்பற்றச் செய்து அன்பாக வருந்திக் கேட்டுக் கொள்கிறார் மனத்தின் அறியாமை கண்டு.

ஆகவே இந்த ராகத்தில் இதைப் பேசுவது இசை இலக்கண ஒலிக்கருத்து தான்கொண்ட பக்திப் பண்பிற்கு ஒத்த உபாயமாக இணைக்கிறது. இதுவே இம் மார்க்க இலக்கியமாகும்.

அமுத் மந்திர ஞானோப தேசமு மருளி யன்புறவே
முருகா வென அருள்புகுந்திடவே கழலார்கழல் அருள்வாயே.

"காமிதார்த்த யலமுலு இச்சி
கைவல்ய மொஸகலேத,"

என்னும் நுணுக்க உட்பொருட் செறிவு என்னவெனின், ராமதாஸர் கிளியைக் கூண்டில் அடைத்துப் பன்னிரண்டு வருஷம் அதனை யதேச்சையாகப் பறந்து திரியவொட்டாது துன்புறுத்தி இருந்தாலும் அவரின் நோக்கம் சிறந்ததான தால் அவரையும் பன்னிரண்டு வருஷம் சிறையில் தள்ளி ராஜன் துன்புறுத்தினும், அந்த ராஜனுக்குச் சேர வேண்டிய பொருளையும் ராமன் நமது ராமதாசரின் நிமித்த மாகக் கொண்டுவந்து பூராப் பணத்தையும் சேர்த்துப் பணம் பூராவும சேர்ந்தமைக்கு அவ்வரசனுடைய கையெழுத்திட்ட ரசீதையும் ராமதாஸனிடத்தில் சேர்த்த தோடு, ராமபிரான் தனது தரிசனத்தையும் தந்து இனிப் பிறவியே இல்லாத ஸாயுஜ்ய பதவியையும் கொடுத்தா னல்லவா, அதைச் சுட்டிக் காட்டி உணர்த்துகின்ற இக பர நலங்களைப் போதிக்கும் தன்மையதாகும்.

மற்றும் மற்றத் தெய்வங்கள் எல்லாம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலிற்கே கர்த்தாக்கள்; ராமன் எல்லாத் தொழிலிற்குமே காரணபூதனாய் வந்தவதரித்தவன், என்று நுணுக்கமாக எடுத்துரைத் திருக்கின்றார். ராம அவதார மஹிமையின் உண்மைத் தத்துவம் துலங்க.

24—4—'50 திங்கட்கிழமை வடலூரில்

சத்திய ஞானசபை

தூபி நீராட்டுதலும் ஜோதி நிறுவுதலும்

அருள் ஞான வள்ளல் ஸ்ரீ இராமலிங்க அடிகள் தாம் அகத்தே கண்ட அருட்பெருஞ் ஜோதியை அனைவரும் புறத்தே கண்டு உய்யுமாறு வடலூரில் சத்தியஞான சபையில் அருட் பெருஞ்ஜோதியை எழுபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் நிறுவியருளினார்கள்.

இவ்வரிய திருச்சபை இப்பொழுது மிகவும் மேன்மையாகப் புதுப்பிக்கப்பெற்று விக்ருதியாண்டு சித்திரைத் திங்கள் 12-ம் நாள் திங்கட்கிழமை (24—4—1950) காலை 9½ மணிக்குள், தூபி நீராட்டுதலும் ஜோதி நிறுவுதலும் நிகழும். ஏராளமான அன்பர்கள் இறை அருளைப்பெற தக்க தருணம்.

அமிர்தவசனியின் நன்றி

அமிர்தவசனியின் முதல் ஆண்டு மலரின் பன்னிரண்டு இதழ்களில் தோன்றுமற் பேசி, சொற் சுவை, பொருட் சுவைகளுடன் தத்தம் அரிய உட்கருத்துக்களை யாவரும் அறியும் மேலான நோக்கத்துடன் கட்டுரைகள் எழுதிவந்த அரும் பெரும் சிலர்களுக்கு ஆசிரியரின் நன்றி உரித்தாகுக.

மக்களின் தெய்வ நலத்தையே முதற் குறிக்கோளாகக் கொண்டுள்ள அமிர்தவசனிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து உதவிபுரியும் பக்த நேயர்களுக்கு இப் பத்திரிகை நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

சென்ற வருடப் பன்னிரண்டு இதழ்களும் 32 பக்கங்களுடன் தோன்றின. சிறந்த சிலரான எழுத்தாளர்களின் கட்டுரைகளை வெளியிட இடம் போதாமலிருந்தமையால், இவ்வருஷத்திய மலர்கள் நாற்பது பக்கங்களுடன் தோன்றும்.

சித்திரை மாதம் ஆரம்பித்து, பங்குனி மாதம் முடிவடையும் வருட சந்தா ரூ. 1-8-0யும் நேரிலோ, மணி ஆர்டர் மூலமாகவோ செலுத்த வேண்டிக்கொள்ளப் படுகிறது.

முருகா வெனவோர் தரமோ தடியார் முடிமேலிணைதாள் அருள்வோனே
ஒருகால் முருகா பரமா குமரா உயிர்கா வெனவோத அருள்தாராய்

அமிர்தவசனியின் தொண்டாற்றல் மகிழ்ச்சியுற்ற நேயர்கள் ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ரூ. 25—0—0 அனுப்பி உதவியுள்ளார்கள். இத் தொகை அமிர்தவசனிக்கு ஆசி கூறும் நன்கொடையெனவே நன்றி பாராட்டி ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

அமிர்தவசனியின் முன்னேற்றத்திற் குரிய கருத்துக்களை யும் நேயர்கள் அவ்வப்போது தெரிவிக்குமாறு வணக்கத்துடன் வேண்டுகிறோம். ஆசிரியர்

அடியார் ஞாயிறு திருக்கூட்டம்,

சென்னை

பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும் பூக்கடை சென்னை மல்லீசுவரர் ஆலயத்து அநுபூதி மண்டபத்தில் காலை 8 மணி முதல் 10 மணிவரை நடந்துவருகிற இத் திருக் கூட்டம் 58 ஞாயிறுகளில் அருணகிரிநாத சுவாமிகள் அரு ளிய 'கந்தரநுபூதி' உணர்ச்சி விளக்கத்தை ஸ்ரீ திருப் புகழ் மணி அவர்கள் வசய் மொழியால் கேட்டு ஆனந்த மடைந்தது. அதற்கு மேல் ஸ்ரீ அருணகிரியாரின் திரு வகுப்புக்களை ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்கள் தொடங்கி, தேவேந்திர சங்க வகுப்பை முடித்து, இப்பொழுது சீர்பாத வகுப்பில் திருவடி தியானத்தில் மக்களை ஈடுபடுத்தி வருகிறார்கள். சிவம், சிவஞானம், சிவபோகம், சிவ யோகம் என்ற விஷயங்களைப்பற்றி எட்டு ஞாயிறுகளில் விரிவாகவும் நுட்பமாகவும் விளக்கினார்கள். சுமார் ஆயிரம் தாயமார்களும், இதற்கு இரட்டிப்பான சகோதரர் களும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் இவ்வுலக சிந்தனைகளினின்று நழுவி, பரமனின் பேரானந்தத்தை இரண்டு மணி நேரம் பருகி, மெய்மறந்து, ஸ்ரீ அருணகிரி நாதர் வாக்குப்படித் தம்மை இழந்த நலத்தைப் பெறு கிறார்கள்.

இத்தகைய திருக்கூட்டம் மற்ற ஊர்களிலும், சென்னையுள்ளும் மற்றப் பகுதிகளிலும நடக்க ஆண்டவன் தக்கோர் உள்ளத்தில் அருள்புரிந்து ஊக்கமளிப்பாராக.

கண்ணப்பன்

கூந்தல் விருத்திக்கு
காஷ்மீர்-குஸும்
என்ற மலர் மூலிகையை
எண்ணெயில் கலந்து கொள்க

நறுமண சரும வைத்தியன்
ஸான்டலக்ஸ்
வேர்க்குரு
சொரி, சிறங்கு, தீப்புண்...

பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
யூனிகான் சுத்த தேன்

நம்பிக்கை பெற்ற
நஞ்சன்கூடு
மருந்துகள்
ரக்தக்கொதிப்புக்கு
I.D.L.29
பைலோ ப்ளட்
வாதநோய்களுக்கு
I.D.L.27
ருமோ பார்ஸ்
ஹிருதவியாதிக்கு
I.D.L.72
ஹார்டோன்
சிசுக்களுக்கும், மாதர்களுக்கு
விசேஷ மருந்துகள்
வியாதி விபரம் எழுதுக
தினசரி உதவிகள்
நஞ்சன்கூடு பல்பொடி
ஜிந்திப் ► அஜீர்ண பித்த சமனி
கூலெக்ஸ் ► உஷ்ண சமன தைலம்

'உடலுக்குள் நீ நின்று
உலாவினதைக் காணாமல்
கடமலை தோறுந் திரிந்து
கால் அலுத்தேன் பூரணமே'
(பட்டினத்தார்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—"FAITH" Estd: 1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.

தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—13
Edited & Published by S. Muthuswamy, 54. Bunder St, Madras,